

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் விஜயாதாயன்பன் தனக்கு மேலும் மூன்று வருடங்களுக்கு பணி நீட்டி வழங்கியதற்காக சந்தித்து நன்றி தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 1.5.2025 அன்று முகாம் அலுவலகத்தில், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ் தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் கோவை புகைப்பட நிபுணர் கோவை சுப்பு தமது 60ஆவது பிறந்த நாளையொட்டி குழந்தைகளுடன் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் மகள் அகஸ்டி மேரீஸ் பிரியங்கா – ஆன்றோ அஷின் இணையரின் திருமண வரவேற்பு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் திருமதி கீதா ஜீவன், மனோ தங்கராஜ், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர் உள்ளனர்.

## கழக மாநில மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் மகள்

# அகஸ்டி மேரீஸ் பிரியங்கா - ஆன்றோ அஷின் திருமண விழா!

### நாகர்கோவிலில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!




**நாகர்கோவில், மே 4–**

**கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் மகள் அகஸ்டி மேரீஸ் பிரியங்கா – ஆன்றோ அஷின் இணையரின் திருமண வரவேற்பு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்தினார்.**

**அப்போது அவர் மணமக்கள் வாழ்வில், எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்திப் பேசினார்.**

**அவர் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:–**

முதலமைச்சர் சார்பாகவும், இளைஞர் அணியின் சார்பாகவும் இன்றைக்கு நம் கழகத்தின் மீனவர் அணிச் செயலாளர் அண்ணன் ஜோசப் சாமுவேல் அவர்களின் இல்லத் திருமண விழா, நம் அனைவரின் வாழ்த்துகளோடு சிறப்பாக நடைபெற்று இருக்கிறது. மீனவர் அணியின் செயலாளரை, இளைஞர் அணியின் சார்பாக வாழ்த்த வந்து இருக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அடிக்கடி சொல்வார். இயக்கத்தில் இளைஞர் அணிதான் முதன்மையான அணி என்று சொல்வார்.

**சிறப்பான திட்டங்கள்!**

இளைஞர் அணி எப்படி மிக மிக முக்கியமான அணியோ, அதேபோல் மீனவர் அணியும் கழகத்தின் மிக மிக முக்கியமான அணி. அந்த அணியின் செயலாளர் அண்ணன் ஜோசப் ஸ்டாலின் அவர்கள் மிகச் சிறப்பாக அந்த அணியின் பணிகளை எல்லாம் செய்யக்கூடியவர். இங்கு நிறைய மீனவ மக்கள் மற்றும் மகளிர் வந்து இருக்கிறீர்கள். மீனவர்களுக்கும், மகளிருக்கும் நம் கழக அரசு, கடந்த நான்கு ஆண்டுகளில் எவ்வளவு சிறப்பாக திட்டங்களை கொண்டு வந்து இருக்கிறது என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இன்னும் 4 நாட்களில் நான்காவது ஆண்டை நிறைவு செய்து, ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.

**அரசின் சாதனைகள்!**

இன்னும் ஒரு வருடத்தில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை நாம் எதிர்நோக்கி இருக்கிறோம். 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகள் நாம் வெற்றி பெற்றாக வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். அந்த இலக்கை நாம் அடைய வேண்டும் என்றால், இந்த மாவட்டத்தில் இருக்கின்ற 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்றால், நாம் அனைவரும், அடுத்த ஒரு வருடம் நம் அரசின் சாதனைகளை எல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த திருமண விழாவில் உங்கள் அனைவரின் சார்பாகவும் வாழ்த்தும் வேளையில், மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். உங்களுக்கு பிறக்கப்போகின்ற குழந்தை ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அழகான தமிழ்ப் பெயரை வையுங்கள் என்று உங்கள் அனைவரின் சார்பாக வேண்டுகோள் வைத்து, மீண்டும் மணமக்களை வாழ்க, வாழ்க என வாழ்த்தி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்!**

கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் கீதாஜீவன், மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகர மேயரும், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளரு மான மகேஷ், நெல்லை மத்திய மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அப்துல் வஹாப், தமிழ்நாடு உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜா, மாநில மீனவர் அணித் துணைத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர், கழக மகளிர் அணி மாநிலச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜன், புஷ்பலீலா ஆல்பன், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் சிவராஜ், தில்லைச்செல்வம், ஜோசப் ராஜா, பாபு வின்பிரெட், மாநகரச் செயலாளர் ஆனந்த், அகஸ்டீஸ்வரம் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, இளைஞர் அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு கிளைகள் தோறும் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிப்பது குறித்தும், DMK ITWing வாட்சப் சேனலை பின் தொடர்வது குறித்தும், கழகப் பணிகள் குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார். தொகுதி தலைமை கழக மேற்பார்வையாளர் கார்த்திகேயன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா! வேலூர் மாவட்டம் -

# காட்பாடியில் மாபெரும் கால்பந்துப் போட்டி !

### கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்!

வேலூர்,மே 4-

வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கால்பந்து போட்டி நேற்று தொடங்கியது.

போட்டியை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் தொடங்கி வைத்தார்.

இன்று மாலை இறுதி போட்டி நடக்கிறது . இதில் கழக பொதுச்

செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கு மாநகராட்சி துணை மேயர் எம். சுனில் குமார் தலைமை தாங்குகிறார். எட்டாவது வட்டச் செயலாளர் ஜே. சசிகுமார் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கே.சி.சுரேஷ்குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள்.

மாவட்ட பிரதிநிதி கே. கண்ணன் வட்டச் செயலாளர்கள் ஏ.எம்.சம்மந்தம் கே.என்.இளங்கோ மாமன்ற உறுப்பினர்கள் டிடா.சரவணன், எஸ்.ஆர். ரஜினி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். போட்டியை அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார்,

மாவட்ட ஊராட்சி குழுதலைவர் மு.பாபு, மாவட்ட பொருளாளர் நரசிம்மன் காட்பாடி தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார் புரவலர் துரை சிங்காரம் ஆகியோர் போட்டியை தொடங்கி வைக்கிறார்கள். போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு கழக பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

பகுதி செயலாளர்கள் ஜி.வன்னியராஜா என். பரமசிவம் பி.முருகப் பெருமாள், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கருணாகரன் எஸ்.தணிகாசலம் சி. ரவி, ஏ.கே.முருகன் ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், பொதுக்குழு உறுப்பினர் லோகநாதன் மாநகர அவை தலைவர் சூரி என்ற கோவிந்தன் மாநகர துணை செயலாளர்கள் ஒய்.தேவநேசன், முன்னா ஷெரீப், மாநகர பொருளாளர் நா.அசோகன் மற்றும் பகுதி செயலாளர்கள், மாவட்ட, நகர, பேரூர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

## இன்று நடைபெறுகிறது!

# கரூர் மாவட்டக் கழகச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அறிவிப்பு!

கரூர், மே 4 -

கரூர் மாவட்ட கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே. மணி குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாம சுந்தரி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே. பல்லவிராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலை யிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள். மாநகர பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர் கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:**

03.05.2024 அன்று கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தின் தீர்மானங்கள்,

கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்படுகின்றது.

இவ்வாறு கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.



கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஆர்க்காடு வீராசாமி அவர்களை கழகத் துணைப் பொதுச் செயலாளராக அறிவிக்கப்பட்டுள்ள மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. உள்ளார்.